செ.வெ.எண்: 58 நாள்: 26.09.2016

**புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ளாட்சி தேர்தலை சிறப்பாக நடத்துவது குறித்து அரசு அலுவலர்களுடனான ஆலோசனைக்கூட்டம் - மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.**

புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் உள்ளாட்சி சாதாரண தேர்தல்கள் 2016 நடத்துவது குறித்து அரசு அலுவலர்களுடனான ஆலோசனைக்கூட்டம் மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் 25-9-2016 அன்று நடைபெற்றது.

இந்த ஆலோசனைக்கூட்டத்தில் மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பேசியதாவது:

தமிழகத்தில் உள்ள உள்ளாட்சி அமைப்புகளுக்கான தேர்தல் தேதியினை தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது. இதன்படி நமது மாவட்டத்தில் உள்ளாட்சி சாதாரண தேர்தல்கள் 17.10.2016 மற்றும் 19.10.2016 ஆகிய தேதிகளில் இரண்டு கட்டங்களாக நடைபெறவுள்ளது. அதனடிப்படையில் நமது மாவட்டத்தில் உள்ளாட்சி தேர்தலை சிறப்பாக நடத்தும் வகையில் அரசு அலுவலர்களுடனான ஆலோசனைக்கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் வேட்பு மனு தாக்கல் பெறுதல், விண்ணப்பங்கள் வழங்குதல், வாக்குச்சாவடிகளில் மேற்கொள்ளப்பட வேண்டிய பாதுகாப்பு ஏற்பாடுகள், தகுதியுடைய விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளுதல், தகுதியற்ற விண்ணப்பங்களை தள்ளுபடி செய்தல், தேர்தல் நடத்தை விதிமுறைகளை தீவிரமாக அமல் படுத்துதல், வேட்பாளர்கள் மேற்கொள்ளப்படவேண்டிய தேர்தல் செலவினங்கள் மற்றும் தேர்தல் செலவினங்களை கண்காணித்தல், வேட்பாளர்களின் வைப்புத்தொகை விபரம், ஒவ்வொரு நாளும் பெறப்பட்ட வேட்பு மனுதாக்கல் விண்ணப்பங்களை அனுப்புதல் போன்ற பல்வேறு விபரங்கள் குறித்து கேட்டறிந்து ஆலோசனை செய்யப்பட்டது. மேலும் அனைத்து அரசு அலுவலர்களும் தேர்தல் விதிமுறைகளை முறையாக கடைபிடித்து தேர்தலை நியாயமாக நடத்தி தங்களது ஜனநாயக கடமையை நிறைவேற்ற அறிவுறுத்தப்பட்டுள்ளது என்றும் மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் பேசினார்.

இக்கூட்டத்தில் திட்ட இயக்குநர் (மா.ஊ.வ.மு) திரு.சந்தோஷ்குமார், உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) (பொ) திரு.முருகண்ணன், நகராட்சி ஆணையர்கள், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் மற்றும் பேரூராட்சி செயல் அலுவலர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**